[திரு. எம். பக்தவத்சலம்] [29th March 1963

களுக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். இந்தியில் மார்க் வாங்குவதற்கு தனி ஸ்காலர்ஷிப். அது இந்திக்காகக் கொடுப்பது. மாணவர்கள் படித்தால் அதையும் பயன் படுத்திக்கொள்ளலாம்.

திரு. ஏ. சுப்ரமணியம்: நம்முடைய தமிழ் நாட்டில் பிற்பட்ட இனத்தவர்கள் இரண்டு கோடிக்கு மேல் ஏராளமாக இருக்கிறார்கள். உபகாரச் சம்பளம் வழங்குவதில் சென்னையில் உள்ள எட்டியப்ப நாயகர் உணவுவிடுதி பாடசாலையில் 48 மாணவர்கள் உணவு விடுதியில் இருந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் 22 மாணவர்கள் மட்டும் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொள்ளும் வகையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 26 மாணவர்களுக்குச் சலுகை கிடைக்கவில்லை. இவைகளுக்கு உடனே கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பொருளாதாரம் இல்லை கொடுக்க. பணம் இல்லாத காரணத்தால் இத்தனை பேருக்குக் கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதுபற்றி ஹரிஜன இலாக்கா டைரக்டரிடம் சொன்னேன். பணத்தை ஒதுக்கினால் கொடுக்க வஞ்சனையில்லை என்றார்கள். இங்கு வந்து சொன்னால் பணம் இல்லை என்கிறார்கள். பணம் திரட்டவேண்டுமென்று புதிய வரிபோட்டால் எதிர்ப்பு வந்துவிடுகிறது. இந்த நிலையில் பொருளாதார அடிப்படையில் உதவிச் சம்பளம் கொடுக்க திட்டமிட்டால் தற்போது கொஞ்சம் நஞ்சம் பிற்பட்டவர்களுக்கு கிடைத்து வருவதுகூட கிடைக்காது. கனம் அமைச்சர் அவர்கள் நேற்று நல்ல முறையில் பதில் சொன்னார்கள். இதைப்பற்றி உடனடியாக முடிவு செய்வதற்கு இல்லை என்று சொல்லியது மகிழ்ச்சிக்குரியது. பிற்பட்ட இனத்தவர்களுக்கு ஜாதியடிப்படையில் இன்னும் பத்து வருஷ காலத்திற்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதை தற்போதுள்ள நிலையை அனுசரித்து அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 182. *Review of the progress made in Co-operative Development Schemes* 1962–63.

* 183. *Statement XXXIII showing action taken on Assurances, promises and undertakings given during Thirteenth to Twentieth Sessions*, 1958–62, *of the Madras Legislative Council.*

* Laid on the table of the House on 25th March 1963.